(திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/72) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(2) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1963-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர் தீர்வை சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/1963), வருவாய்க் கணக்கு களில் நன்செய், புன்செய் மானவாரி நிலங்களெனப் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்காக, சந்தர்ப்பத்திற்கேற்ப, கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர் தீர்வை விதிப்பதற்கு வகை செய்கிறது. ஆயினும், வரி விதிக்கப்பட்ட தரிசு நன்செய் நிலங்களுக்குக் கூடுதல் நிலவரி விதிப்பதற்கும், புறம்போக்கு நிலங்கள் வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள் (புன்செய் அல்லது மானவாரி), விதிக்கப்படாத தரிசு நிலங்கள் ஆகியவற்றிற்குக் கூடுதல் தண்ணீர் தீர்வை விதிப்பதற்கும் மேற்படி சட்டம் வகை செய்யவில்லை. மேற்படி சட்டத்தின் விதித்துறைகளின்கீழ், நன்செய் நிலங்கள், பாசனப் புன்செய் நிலங்கள் ஆகியவற்றின் உடைமையாளர்கள் முறையே கூடுதல் நில வரியையும், கூடுதல் தண்ணீர் தீர்வையையும் செலுத்துகையில், மேற்குறிப்பிட்ட நிலங்களை மேற்படி சட்டத்தின்

@ 91-92 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 19] [திரு. ப. உ. சண்முகம்]

செயல்வரம்பிலிருந்து விட்டுவைப்பது முரணானதாகும் என்று கருதப்படுகிறது. மேற்சொன்ன வகை நிலங்களை மேற்படி சட்டத்தின் செயல்வரம்பிற்குள் கொண்டுவரும்பொருட்டு மேற்படி சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் 2 (11) பிரிவில், "நன்செய் நிலம்", "ஒருபோக நன்செய் நிலம்", "வரி இணக்கம் செய்துகொள்ளப் பட்ட இருபோக நன்செய் நிலம்", அல்லது "இருபோக நன்செய் நிலம்", என்ற சொற்களுக்கு, அரசின் வருவாய்க் கணக்குகளில், சந்தர்ப்பத்திற்கேற்ப நன்செய் ஆக, ஒருபோக நன்செய்யாக, வரி இணக்கம் செய்து கொள்ளப்பட்ட நன்செய்யாக அல்லது இரு போக நன்செய்யாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்களெனப் பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. வரி விதிக்கப்பட்ட தரிசு நன்செய் நிலங்கள் மேற்படி பிரிவின் செயல் வரம்பிற்குள் வரவில்லை. எனவே, மேற்படி சட்டத்தின் 3-வது, 4-வது பிரிவுகளின்கீழ்க் கூடுதல் நிலவரி விதிக்கப்பட்ட தரிசு நன்செய் நிலங்களை ஒருபோக நன்செய் நிலங்களாக அல்லது இருபோக நன்செய் நிலங்களாகக் கருதும் வகையில் இப்பிரிவைத் திருத்துவ தெனக் கருதப்படுகிறது.

அரசின் வருவாய்க் கணக்குகளில் புன்செய்யாக அல்லது மான வாரியாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்குக் கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்கு மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவு வகை செய்கிறது. அதாவது, அப்பிரிவின்படி, முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புப் பாசன வாயில் மூலம் பாசனம் பெறும் நிலங்கள் குறித்து 75 சதவீதமும், மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது வகுப்பு பாசன வாயில் மூலம் பாசனம் பெறும் நிலங்கள் குறித்து 37½ சதவீதமும் தண்ணீர்த் தீர்வை உயர்த்தப் படும் புறம்போக்கு நிலங்கள், வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள் (புன்செய் அல்லது மானவாரி) அல்லது வரி விதிக்கப்படாத தரிசு நிலங்கள் அனைத்தையும் ஒரே வகை நிலங்களாக கருதி, இந்த நிலங்கள் மீது கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிக்கும்பொருட்டு, இந்நிலங்களை இப்பிரிவின் செயல்வரம்பிற்குள் கொண்டுவருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சட்டத்தின் 5 (1) பிரிவு நிலவரி, தண்ணீர் தீர்வை, கூடுதல் தண்ணீர் தீர்வை ஆகிய வற்றின் மொத்தத் தொகை, ஒருபோகப் பயிர் மட்டும் விளைவிக்கப்

படும் நிலங்களுக்கும், ஒரு பயிருக்கு மேல் விளைவிக்கப்படும் நேர்வில் முதல்போகப் பயிருக்கும், விளைச்சல் ஆண்டு ஒன்றிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15-க்கு மேற்படக்கூடாது என்று வகை செய்கிறது. புறம்போக்கு நிலங்களுக்கும் வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்களுக்கும் (புன்செய் அல்லது மானவாரி), வரி விதிக்கப் படாத தரிசு நிலங்களுக்கும் உயர்ந்த அளவு வரம்பு வரையறுக்க வேண்டிய தேவையில்லை என்று கருதப்படுகிறது. ஏனென்றால், இந்த நிலங்கள் ஆக்கிரமிப்பின்கீழ் உள்ளன. இது காரியத்துக் கென, மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவிற் கண்ட வரம்பு நிபந்தனைகளிலிருந்து இந்த நிலங்களை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்போதுதான், இப்பிரிவின் முக்கிய விதித்துறை அது காரணமாகவே இந்த நேர்வுகளில் செல்திறன் உள்ளதாகும். மேற்சொன்ன நோக்கங்களை எய்த இந்தச் சட்ட வரைவு விழைகிறது.

இப்பேரவை இதனை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத்தலைவர் : முன் மொழியப் பட்ட தீர்மானம் :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 28/72) பரிந்துரை செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

* **திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, தரிசு நிலங் களாகவும், புறம்போக்கு நிலங்களாகவும் இருக்கும் நிலங்கள் சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டு, நல்லபடியாக சீர்திருத்தி, தண்ணீர் கிடைக்கும் பட்சத்தில் ஏரிகளிலிருந்துகூடப் பாய்ச்சி, கடைசியில் புதிய நஞ்சை நிலங்களாக மாற்றி, சிலபேர் தரிசு நிலங்களை உழுது வருகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை லாபம் கிடைப்பது கஷ்டம். அவர்களுக்கு கூடுதலான வரியும், தண்ணீர் வரியும் விதிக்கப்படுவதற்கான மசோதா இது. தரிசாகக் கிடக்கும் நிலங்களை உழுது, சாகுபடி செய்ய வேண்டியது முக்கியமானது. அதை இன்றைக்கு ஆளும் கட்சியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகம்கூட, அன்றைக்கு எதிர்க் கட்சியாக இருக்கும்போது, இம் மாதிரி தரிசாக இருக்கும் நிலங்களை ஜாரி செய்ய வேண்டுமென்று

ளிர்ச்சி செய்து வந்தது. இப்போதும், தரிசு நிலங்களை உணவுப் பெருக்கத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து, தண்ணீர் கிடைத்தால் பாய்ச்சி நஞ்சை நிலங்களாகவும், தண்ணீர் கிடைக்காவிட்டால் புஞ்சை நிலங்களாகவும் சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்கள் சாகுபடி செய்து லாபம் பெறுவதினால், மற்ற நல்ல நிலங்களுக்கு இருப்பதுபோல் கூடுதல் வரியும், கூடுதல் தண்ணீர் வரியும் விதிக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் இந்தத் திருத்தத்தைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் காடுகளாக இருந்த நிலங்கள், மேடு பள்ளங்களாக இருந்த நிலங்கள், மரங்கள், செடிகள், புதர்களாக இருந்த நிலங்களைச் சீர்திருத்தி நல்ல நிலைமையில் கொண்டுவந்ததற்காக, உடனே அதிகப்படியான வரியைப் போட்டால் அவர்கள் தாங்கமாட்டார்கள். அவர்களை நல்ல முறையில் உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்த வேண்டும். 10 வருடமாவது அனுபவித்த பிற்பாடு, இந்த வரி விதிப்பு அமுலுக்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆக்கிரமித்த அவைகளை நஞ்சையாகவோ, புஞ்சையாகவோ, காடுவெட்டி சீர்திருத்தி சாகுபடி செய்ய ஆரம்பித்த விவசாயி, 10 வருடத்திற்கு சாதாரண வரி செலுத்திவர வேண்டும். இந்த அதிகப்படி வரியையும் அதிகப்படி தண்ணீர் வரியையும் 10 வருஷங்களுக்குப் பின்னர் விதித்தால் நலமாக இருக்கும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கப்படுத்துவதாகவும் இருக்கும். பொதுவாக இந்த வரி விதிப்பை நான் ஆட்சேபிக்கவில்லை. புதிய நிலங்களைச் சீர்படுத்தவே 5, 6 வருஷங்கள் ஆகும். இது விவசாயத்தில் உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதன் பின்னர் நிலத்திலிருந்து வருவாய் பெற்று நஷ்டத்தைப் போக்க மேலும் 4, 5 வருஷங்களாகும். அதனால் தான் 10 வருஷத்திற்குப் பின்னால் இந்தக் கூடுதல் வரியை விதிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. எஸ் ஜெயராம ரெட்டியார் : தலைவர். அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்தை ஆதரிக்கின்ற சமயத்திலே, ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். சாதாரணமாக கிராமங்களில் இருக்கிற குளங்களிலே 'புல் டேன்க் லெவல்' என்று இருக்கிறது. அதன் மூலம் இவ்வளவு ஏக்கர்

நிலம்தான் பாசனம் செய்யமுடியும், 4 மாதத்திற்குத் தண்ணீர் இருக்கும் என்ற கணக்கு இருக்கிறது. ஆனல் இபபோது உணவு உற்பத்தி அதிகமாக வேண்டுமென்ற அவாவினுலே தரிசு நிலங்களைப் பயிரிட அவர்களுக்குத் தண்டத் தீர்வை போடாமல், அனுமதித்துக் கொண்டிருந்தார்கள். அதைக் காரணமாக வைத்து, அதிகமான அளவு நிலம் சர்குபடிக்கு வருவதால், ஏற்கெனவே இருக்கிற நிலங்களின் நீர்ப்பாசனம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். இந்தக் கூடுதல் வரி விதிப்பைப்பற்றி ஆட்சேபணை யில்லை என்றாலும், அங்கிகாரம் கொடுப்பதில் ஜாக்கிரதையாக இருந்து, ஏற்கெனவே இருக்கிற நீர்ப்பாசனத்தைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் கூறும்போது 10 ஆண்டுகளாவது அதிகப்படி வரி விதிக்காமல் இருக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். ஆனல் புறம்போக்காக இருந்த நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை என்று கருதினல், தாராளமாக அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கிறது. அவர்களுக்கு அந்தப் பட்டா வாங்குவதற்குத் தகுதி இருக்குமேயானல், எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதற்கான தகுதி, முறைகள் வைத்திருக்கிறோம். ஆனல் சிலபேர், தங்களுக்கு வேறு பல நிலங்களை வைத்துக்கொண்டு புறம்போக்கு பூமியை எடுத்து உழுது கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு, சிலர் அரசாங்கத்துக்கு ஆட்சேபணையாக உள்ள சில இடங்களை, புறம் போக்கில் உழுதுகொண்டு, காலி செய்யமாட்டோம் என்று கூறுகிறார்கள். திரு. ஜெயராம ரெட்டியார் குறிப்பிட்டதைப் போல், ஆயக்கட்டுக்கு சம்பந்தப்பட்ட இடங்களில், ஆயக்கட்டு தாரைவிட அதிகத் தண்ணீரை, புறம்போக்கு என்ற இடத்தில் பாயவிட்டுகொண்டிருக்கிறார்கள். மேட்டூர் பகுதியில் வேறு எங்கும் இல்லாத விசித்திரமான சூழ்நிலை இருக்கிறது. மேட்டூரில் தண்ணீர் பிடிக்கிற பகுதி இருக்கிறது. அந்த எல்லைக்கோட்டுப் பகுதியில் தண்ணீர் குறையக் குறைய கிடைக்கும் நிலத்தில் 3 ஆயிரம் ஏக்கருக்கு மேலான பகுதியை ஆக்கிரமித்து, உழுது கொண்டிருக்கிறார்கள். அவ்வளவையும் புறம்போக்கு என்ற பெயரில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் காலி செய்ய வேண்டு

1972 ஆகஸ்ட் 19] *[திரு. ப. உ. சண்முகம்]*

மென்று சொன்னால், அரசியல் நோக்கத்தோடு பல பேர் எதிர்க்கிறார்கள். அப்படி 2,000, 3,000 ஏக்கரைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். கண்டருக்கு மேல் பக்கம், எல்லைக்கு மேல்பக்கம் உழக்கூடாது என்று அதை, 'புரோஹிபிடட் ஏரியா' என்று வைத்திருக்கிறோம். இங்கே 4,000 ஏக்கர்வரை உழுதுகொண்டிருக்கிறார்கள். புறம்போக்கு நிலமாக இருந்தாலும், அரசாங்கத்திற்கு ஆட்சேபகரமாக உள்ள இடங்களில்தான் கூடுதல் தண்ணீர்த் தீர்வை போடுகிறோம். சாதாரணமாகப் போடவேண்டியதற்கு என்ன தீர்வை போடுகிறோமோ அதே தீர்வையைப் போட வேண்டுமென்ற முறையில்தான் போடுகிறோமே தவிர, அவர்களுக்குக் கூடுதல் தீர்வை போடவேண்டுமென்பதற்காக அல்ல. இதன் மூலம் அதிக லாபம் வரும் என்பதல்ல. அதிகமாக வராது என்று தெரியும். இருந்தாலும்கூட, பட்டா நிலம் வைத்திருப்பவர்களுக்கு எவ்வளவு தண்ணீர்த் தீர்வை போடுகிறோமோ அந்த அளவுக்கு புறம்போக்கு பூமிக்குப் போடவில்லை என்று சொன்னால், நியாயமாக இருக்காது என்று கருதி, இந்தத் தண்ணீர்த் தீர்வை போடுகிறோமே தவிர வேறு அல்ல. இந்தத் தண்ணீர்த் தீர்வை 1963-ம் ஆண்டு போடப்பட்டது. அப்போதே புறம்போக்கு பூமிக்கும் போட்டிருக்க வேண்டும். ஏற்கெனவே தவறி விட்டுப் போய்விட்டது. அதைத்தான் இப்போது விஸ்தரிக்கிறோம்.

இன்னொன்று கூட இப்போது போடுகிறோம். 'பர்ஸ்ட் கிளாஸ் சோர்ஸ்' என்றால் பட்டா பூமியா இருந்தால் 15 ரூபாய்க்கு மேல் தண்ணீர்த் தீர்வை கூடாது என்ற உச்சவரம்பு இருக்கிறது. புறம்போக்கு நிலத்தைப் பொறுத்தவரை, அந்த உச்சவரம்பு தேவையில்லை என்று சொல்கிறோம். அப்படித் தேவையில்லை என்று சொன்னாலும், அதிக பட்சம் ரூ. 26.25 தான் வரி வரும். அதற்கு மேல் இருக்காது. 75 சதவீதம் தான் கூட்டலாம், அதற்கு மேல் கூட்ட முடியாது. அரசாங்கத்துக்கு ஆட்சேபணை உள்ள புறம்போக்கு நிலங்களில் பயிரிட்டால், அதைத் தடுப்பதற்காகத் தான் இப்படி ஒரு விதிமுறையைக் கொண்டு வருகிறோம். அரசாங்கத்திற்குத் தேவையில்லையென்றால், அந்த இடத்தை உழுகிறவன் பட்டா பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவனாக இருந்தால், பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆனால் பல இடங்களில் ஏற்கெனவே நிலம்

வைத்திருக்கிறவர்கள் இப்படிப்பட்ட நிலத்தையும் எடுத்துப் பயிரிட்டுக்கொண்டு, இருக்கிற ஆயக்கட்டு தாரர்களைப் பாதிக்கக் கூடிய அளவில் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களை அனுமதித்துக்கொண்டிருக்கக்கூடாது என்பதற்காகத் தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. என்னுடைய இந்த விளக்கத்திற்குப் பிறகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்தத் திருத்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. கே. ராஜாராம்** : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல், ஆட்சேபணைக்குரிய ஆக்கிரமிப்புகள் இருந்தால், அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவு பிறப்பித்து அந்த நிலங்களை அரசாங்கம் கைப்பற்றுவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அரசே அங்கீகரித்து புறம்போக்கு நிலத்தைச் சாகுபடி செய்ய விட்டு விட்டு, அந்தப் புறம்போக்கு நிலத்திற்கும் இப்போது அதிக வரி போடப்படுகிறது. 'அசெஸ்டு வேஸ்ட்'—தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள், புறம்போக்கு இந்த இரண்டு வகை நிலங்களையும் சாகுபடி செய்ய அனுமதித்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலங்களைச் சீர்திருத்திச் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கே 5, 6 வருஷம் ஆகும். அதனால் தான் முதல் 10 வருஷத்திற்காவது இந்த அதிகப்படியான கூடுதல் வரி போட வேண்டாமென்று சொன்னேன். அப்படியில்லாமல் நியாயமற்ற முறையில் ஆக்கிரமித்துக் கொண்டு உழுது கொண்டிருக்கிறவர்களுக்குப் பரிந்து பேசுவதற்கு நான் வரவில்லை. அவர்களை நிலத்தை விட்டு அப்புறப்படுத்துவதில் கூட ஆட்சேபணை யில்லை. இதை மனதில் கொண்டு இப்போது இயலாமற்போனாலும் பின்னால் விதிகள் மூலமாவது இந்தக் கூடுதல் வரியை அப்படிப் பட்ட நியாயமான முறையில் புறம்போக்கு நிலத்தை எடுத்து சீர்திருத்தி விவசாயம் செய்கிறவர்களுக்கு 10 வருஷத்துக்கு விதிக்காமலிருக்க வழி செய்யும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, முன்பு பேசியபோதே ஒன்று சொல்லத் தவறிவிட்டேன் என்று நினைக்கிறேன். அரசாங்கம் தண்ணீர் கொடுக்கிற இடத்துக்குத்

தான் இந்த வரி. எல்லா புறம்போக்கு நிலத்துக்கும் அல்ல. அரசாங்கத் தண்ணீர் எங்கெங்கே பயன்படுத்தப்படுகிறதோ அங்கே தான் இந்தத் தீர்வை விதிக்கப்படும். ஆகையால் இந்த வரி விதிப்பில் ஒன்றும் தவறில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா புறம்போக்கு நிலத்துக்கும் பாதகமாக அமையாது என்று தெரிவித்து இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன்உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை முன்வடிவு எண் 28/1972) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது, சட்ட முன்வடிவு பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1972) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன்உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1972) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.